# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1992/43 - 2016 නොවැම්බර් මස 10 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.11.10

*1992/43 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 11/2015.*

**கைத்தொழில் பிணக்குகள் சட்டம் (அத்தியாயம் 131)**

*1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் (அத்தியாயம் 131) 39 ஆம் பிரிவின் கீழ் தமக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டவையும், பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டவையுமான ஒழுங்குவிதிகள்.*

டபிள்யூ. டி. ஜே. செனெவிரத்ன,
தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்.

கொழும்பு,
*2016, ஒற்றோபர் 28.*

ஒழுங்குவிதிகள்

*1959 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 2 ஆந் திகதிய 11688 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையும், காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவையும் மற்றும் கடைசியாகத் திருத்தப்பட்டு 2008 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதிய 1542/35 ஆம் இலக்க, வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையுமான, 1958 ஆம் ஆண்டின் கைத்தொழில் பிணக்குகள் சட்ட ஒழுங்குவிதிகள், அவற்றுக்கான இரண்டாம் அட்டவணையில், அவ்வட்டவணையின் 2 ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம், இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன.*

"2. இதன் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டதற்கமைய, ஒவ்வொரு நடுத்தீர்ப்பாளரும் அல்லது கைத்தொழில் நீதிமன்றத்தின் உறுப்பினரொருவரும், அவர் இலங்கை அரசாங்கத்தின் அலுவலரொருவராக இல்லாதிருப்பின், அமர்வுகளுக்கு வருகை தருவதற்காக, பின்வரும் வீதத்தில் கணக்கிடப்படும் கட்டணமொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும் :

(1) (அ) ஒவ்வோர் அமர்வினதும் கால எல்லை ஒரு மணித்தியாலயத்தை விஞ்சாதிருப்பின், அத்தகைய அமர்வுக்காக 1,000 ரூபா ;

(ஆ) ஒவ்வோர் அமர்வினதும் கால எல்லை ஒரு மணித்தியாலயத்தை விஞ்சுவதுடன், மூன்று மணித்தியாலயங்களை விஞ்சாதிருப்பின், அத்தகைய அமர்வுக்காக 1,500 ரூபா அத்துடன்

(இ) ஒவ்வோர் அமர்வினதும் காலஎல்லை மூன்று மணித்தியாலங்களை விஞ்சுமாயின், அத்தகைய அமர்வுக்காக 2,000 ரூபா.

ஆயின், எவ்வாறாயினும், ஒவ்வொரு கைத்தொழில் பிணக்கு தொடர்பிலான அமர்வுகளுக்கு வருகை தருவதற்காக, நடுத்தீர்ப்பாளர் அல்லது கைத்தொழில் நீதிமன்ற உறுப்பினரொருவர் பெறுவதற்கு உரித்துடையவராக இருக்க வேண்டிய அதிக பட்சத்தொகை 25,000 ரூபாவை விஞ்சுதலாகாது.

(2) (அ) நடுத்தீர்ப்பு அளிப்பை எழுதுவதற்கான ஊக்குவிப்பாக 5,000 ரூபா ;

(ஆ) அத்தகைய நடுத்தீர்ப்பாளர் அல்லது கைத்தொழில் நீதிமன்ற உறுப்பினரொருவர் அத்தகைய கைத்தொழில் பிணக்கு தொடர்பிலான அளிப்பு, கேட்பானது முடிவுற்றதிலிருந்து ஆறு வாரங்களினுள் கையளிக்கப்படின், அத்தகைய ஒவ்வொரு கைத்தொழில் பிணக்கு தொடர்பிலும், 5,000 ரூபாவுக்கு மேலதிக கொடுப்பனவொன்றிற்கு உரித்துடையவராதல் வேண்டும்".

*11- 1117*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.